**எலஹர பிரதேச சபை**
**பொலன்னறுவ மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூலை 08 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து எலஹர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெறாமையால் முத்திரைக் கட்டண வருமானம் என ரூபா 150,000 என மதிப்பீடு செய்யப் பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டிற்கான நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் என மாகாண திறைசேரியினால் 2018 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் ஆகிய ரூபா 1,203,317 தொகை மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் எடுக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைக்கப்பட்ட முத்திரைக் கட்டணம் தொடர்பாக கோவைகளை பரிசோதனை செய்து சரியான முத்திரைக் கட்டணத்தை இனங்காண்பதற்கு மற்றும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல்கள் கிடைப்பதில் தாமதத்தின் காரணமாக மதிப்பிடப்பட்டதுடன் கொடுப்பனவு பரிந்துரைக் கப்பட்ட தொகை கணக்கீடு செய்யப்படும் என காட்டப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைக்கு, நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருந்த ரூபா 82,300 இற்கான 02 சொத்துக்கள் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பெறுமதியை இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது என அறிவிக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 659,390,604 தொகைக்கான 07 சொத்துக்கள் மற்றும் பொறுப்பு விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக் கப்பட வேண்டும். | உரிய பதிவேடுகள் பேணப் படுவதுடன், 2019 கணிப்பீட்டு சபை அறிக்கை தயாரிக்கப் பட்டு வருவதுடன், 2020 இல் புதிய கணக்கு விடயங்களுக்கு அமைவாக பதிவேடுகள் தயாரிக்கும் போது சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளை சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். |
| (ii) | ரூபா 937,680 தொகைக்கான 02 வருமான விடயங்கள் தொடர்பாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்க வில்லை. | விரிவான அட்டவணை மற்றும் வருமானப் பதிவேடு தயாரிக்கப்பட்டு நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2020 முதல் வருமானங்களை ஆவணப்படுத்தி நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்படும் என அறிவிக்கின்றேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | | |
| | ரூபா. | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | | |
| (i) பிரிவு 24 | | பிரதேச சபையினால் பேணப்பட்டு வருகின்ற பாதைகள் மற்றும் ஒழுங்கைகளின் பெயர் விபரங்கள் தொடர்பாக அறிவித்தல் பிரசுரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றுவதற்காக செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் உரிய விடயங்கள் மேற்கொள்வேன். |
| (ii) பிரிவுகள் 150, 152 மற்றும் 159(1) மற்றும் (2) | 21,361,018 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சட்டத்தின் ஏற்பாடுகளின் படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,891,274 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,134,529 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 57,122 தொகை காணப்படும் 02 வங்கிக் கணக்குகள் 01 முதல் 07 வருடங்கள் இடைப்பட்ட காலவீச்சில் செயற்படாத கணக்கு என காணப்பட்டது. | பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக ஆலோசனை பெறுவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,318,674 | 1,285,850 | 1,779,738 | 389,546 | 1,488,674 | 1,229,949 | 1,488,088 | 785,795 |
| வாடகை | 8,345,000 | 8,153,570 | 10,843,230 | 3,249,760 | 10,345,800 | 17,383,010 | 12,149,925 | 6,023,920 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 230,000 | 344,000 | 344,000 | - | 350,000 | 242,251 | 242,251 | - |
| ஏனைய வருமானங்கள் | 15,973,000 | 21,590,603 | 19,210,958 | 17,505,388 | 12,100,000 | 18,830,418 | 9,386,075 | 15,125,743 |
| மொத்தம் | 25,866,674 | 31,374,023 | 32,177,926 | 21,144,694 | 24,284,474 | 37,685,628 | 23,266,339 | 21,935,458 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2004 ஆண்டின் பின்னர் வீதவரி பெறுமதி மதிப்பீடு செய்திருக்காததுடன், 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாக வைத்து வரி அறவீடு செய்யப்பட்டுள்ளது. | 05 வருடங்களுக்கு ஒரு முறை வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். உள்ளுராட்சி திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப் பட்டுள்ளதுடன் அங்கீகாரத்தின் பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.3.3 வாடகை வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 84 கடையறைகளின் உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கும் மற்றும் புதிய உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 3,249,760 தொகையாகக் காணப்பட்டது. | நிலுவை வாடகை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (இ) | தியபெதும தெஹிவத்த வாராந்த சந்தை வளவில் அமைந்துள்ள 06 கடையறைகளில் இருந்து அறவிடப் பட வேண்டிய ரூபா 1,769,050 கேள்வித் தொகை 2019 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை மிகவும் விரைவாக அறவீடு செய்வேன் என அறிவிக்கின்றேன். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக ஜே.சீ.பீ. இயந்திரம், மோட்டார் க்ரேடர் இயந்திரம், இரும்பு உருளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 884,130 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 12,053,270 தொகை மற்றும் 2018 ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,061,805 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை சரியாக இனங்காண்பதற்கு மற்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானத்தில் 69 சதவீதம் தற்போது அறவீடு செய்யப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2019 ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | வருடாந்த திட்டம் ஒன்று தயாரிக்கப் பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்துகின்ற நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன், அக் குறிக்கோள்கள் இடையே சபைக்கு உரிய குறிக்கோள்களை சரியாக இனங்கண்டி | சபைக்கு உரிய குறிக்கோள்களை இனங்காணல், தரவு சேகரித்தல் நடைமுறை தயாரித்தல், நிதி | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| ருக்காததுடன், குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகளுக்காக தரவுகள் சேகரிக்கும் நடைமுறை ஒன்று காணப்படவில்லை. 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் சபையினால் இனங்கண்டிருக்கவில்லை. இலக்குகளை நெருங்குவதற்காக நிறுவனத்தின பதவியணியினரை பயிற்றுவிக்கும் நடைமுறை ஒன்று மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொடர்வு கொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்களை இனங்கண்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளை மேற் கொள்வதற்காக தொடர்புடைய நிறுவனங்களை இனங்காண வேண்டும். | |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| உக்கக் கூடிய குப்பைகளை காப்புக் காணியில் குவிப்பதன் மூலம் சுற்றாடல் மாசடைவதை குறைப்பதற்கு வேலைத் திட்டம் ஒன்று அமுல் நடத்தியிருக்கவில்லை. | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத் துவத்திற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020.02.22 முதல் கௌசிமா இயந்திரத்திற்கு குப்பைகளை எடுத்துச் செல்லப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் மற்றும் வசதிகள் குழுவினால் வழங்கப் பட்டிருந்த 03 பரிந்துரைகளை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | சுற்றாடல் குழு பரிந்துரையை செயற்படுத்துவதற்காக சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். | சபையில் கோரமின்மை காரணத்தினால் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்க வில்லை. |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

### ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையின் அங்கீகரிக்கப் பட்ட 07 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன், 14 பதவிகளில் மிகைகள் காணப்பட்டன. | நிறுவனத்தின் தேவைக்கேற்ப பதவியணியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். வெற்றிடங்களை நிரப்புவதற்கு மிகைப் பதவியணியை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 332,500 தொகை பெறுமதியான மா அரைக்கும் உபகரணங்கள் 10 வருடங்கள் மிகையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திணைக்களத்திடம் ஆலோசனை வேண்டியுள்ளேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 01 மாத்திரம் நடைபெற்றுள்ளது. | காலாண்டு ஒன்றிற்கு ஒன்று வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 ஆண்டு முதல் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4.3 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தூரசேவை பஸ் தரிப்பிடம் மற்றும் வர்த்தக கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் ஒன்று அமுல் நடாத்துவதற்காக சபையின் அங்கீகாரம் மற்றும் முன்சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படாமல் கற்பாறை ஒன்று உடைக்கும் செயற்திட்டத்திற்காக செலுத்தியிருந்த ரூபா 15,675,708 தொகை பயனற்ற செலவொன்றான மாறியுள்ளதுடன், அந்த தொகை மற்றும் ஏனைய பின்நிகழும் பொறுப்புக்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக பிரதேச சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | சட்டரீதியல்லாத முறையில் செயற்படுவதற்காக செலவிடப்பட்ட தொகையினை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் விசாரணை ஒன்று மேற்கொள்ளுமாறு வேண்டியுள்ளேன். |